கட்டுரை 13 · ARTICLE 13 | நவீன இலக்கியங்கள்: நாவல், கவிதை

வேள்பாரி புதினத்தில் தகவல் தொழில்நுட்பம்

Information Technology in the Novel Velpari

முனைவர் கா. பிரேமா

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
வே.வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்

***Dr. K. Prema**, Assistant Professor, Department of Tamil, V.V. Vanniaperumal College for Women, Virudhunagar*
மின்னஞ்சல்: prema@vvvcollege.org

பக்கங்கள்: 83–89

ஆய்வுச் சுருக்கம்

வேள்பாரி புதினம் இயற்கையோடு இணைந்த வாழ்வை பறைசாற்றுகிறது. மனிதன் முதலில் சீழ்க்கை ஒலி வாயிலாக தனது தகவல் தொடர்பை மற்றவர்களுடன் பரிமாறிக் கொண்டான். பின்னர் தகவல்கள் தூது வழியாக பறவை மற்றும் விலங்குகள் மூலம் சென்றடைந்தது. தற்போதுள்ள காலகட்டங்களில் கணினி மற்றும் திறன்பேசி வழியாகவும் இன்னும் பல தொழில் நுட்பங்கள் மூலமும் தகவல்கள் மக்களிடையே சென்றடைந்துள்ளன. வேள்பாரி புதினம் சங்க காலப் பின்னணியைக் கொண்டது. நவீன கால தொழில்நுட்பங்கள் எதுவும் அன்றைய காலகட்டங்களில் இல்லெயெனினும் இயற்கையின் துணை கொண்டு அவர்கள் தகவல்களைக் கடத்தினர். வரலாற்றுப் புதினங்கள் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் அரசியல், பொருளாதாரம், பண்பாடு ஆகியவற்றைப் புனைவின் வழி வெளிப்படுத்துகின்றன. இயற்கையின் வழியாக மக்கள் எவ்வாறு தகவல் தொடர்பு மேற்கொண்டனர் அதன்வழி அவர்கள் வாழ்வை செம்மையுற அமைத்தனர் என்பது குறித்து நாம் அறிய முடிகிறது. இப்புதினத்தில் மூவேந்தர்களால் அழிக்கப்பட்ட குலங்கள் பாரியிடம் அடைக்கலம் புகுகின்றனர். இவர்கள் அவர்களின் தகவல் பரிமாற்றம் குறியீடு வழியாக அமைந்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

திறவுச்சொற்கள்: வேள்பாரி; தகவல் தொடர்பு; வரலாற்றுப் புதினம்; ஏழிலைப் பாலை; தெய்வ வாக்கு விலங்கு; அசுணமா; கூடல் நகர்; நாகம்; பறம்பு மலை

Abstract

The novel Velpari celebrates a life lived in harmony with nature. Human beings first exchanged information with one another through whistling sounds; later, messages reached their destination through envoys, birds and animals. In the present age, information reaches people through computers, smartphones and many other technologies. Velpari is set against a Sangam-age background. Although none of the technologies of the modern age existed in that period, people conveyed information with the help of nature. Historical novels reveal, through fiction, the politics, economy and culture of a particular period, and this novel shows how people communicated through nature and thereby ordered their lives well. In the novel, the clans destroyed by the three crowned kings take refuge with Pari, and their exchange of information is seen to take place through signs and codes.

Keywords: Velpari; communication; historical novel; Ezhilaippalai (seven-leaf palai tree); the divine-oracle animal; Asunamā; Koodal city; Nāgam; Parambu hill

முன்னுரை

சங்க இலக்கியங்களில் பாரியைப் பற்றிய குறிப்புகளை எடுத்துக் கொண்டு சில புனைவுகளை உட்புகுத்தி வேள்பாரி புதினத்தைப் படைத்துள்ளார் சு.வெங்கடேசன். பாரியின் வியத்தகு ஆளுமையைத் தனது படைப்பின் வழி வெளிக்கொண்டு

வந்துள்ளார். மண்ணையும் தன்னிடம் அடைக்கலம் தேடி வந்த குலமக்களைக் காப்பவனாகவும் பாரி இருக்கிறான். பாரி மட்டுமல்லாது பறம்பு மலையில் இருக்கக் கூடிய அனைவரையுமே இயற்கையைக் காப்பவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். பேச்சு, பாடல், தூது, சைகை, ஒலி, அடையாளம், சடங்கு, கலை போன்றவை வழி தகவல்கள் சென்றடைந்தன. நவீன காலம் போன்று இல்லாது பழங்காலத்தில் தகவல்களைச் சேகரிப்பதற்கும், தகவல்கள் மற்றவர்களுக்குச் சென்றடைவதற்கும் போர் காலங்களில் தகவல்களை எவ்வாறு பரிமாறிக் கொண்டனர் என்பதையும் வேள்பாரி புதினம் எடுத்தியம்புவதே இவ் ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது.

வேள்பாரி

கடையேழு வள்ளல்களில் ஒருவராக சங்க இலக்கியங்களில் பாரி புகழப்படுகின்றார். அவருடைய கொடைச் சிறப்பு, புலவர்களுடனான உறவு, பறம்பு மலை மீது காட்டும் அன்பு, அவரது கொடைச்சிறப்பை பாராட்டும் வகையில் அமைவது முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி என்பது ஆகும். இது இயற்கையின் மீது அவன் வைத்துள்ள பெரும் மதிப்பீடு ஆகும். இச்செய்தி யாரால் கடத்ததப்பட்டிருக்கும் என்று நோக்குகையில் அவ்வழியாக வரக்கூடிய பாணர்கள் இந்நிகழ்வைக் கண்டு அதை அவர்கள் ஒவ்வொரு இடத்திற்குச் செல்லும் போதும் அவனது புகழை தனது பாடல்களின் வழி பாணர்கள் நிலைநாட்டினர். இது பாணர்கள் பாரியின் பெருமையை ஒவ்வொருவரும் அறியும் வகையில் செய்தவர்கள் ஆவர்.

இயற்கை வழித் தகவல்தொடர்பு

வேள்பாரி புதினத்தில் மரங்கள், விலங்குகள், பறவைகள் இதன் வழியே பெரும்பாலும் தங்கள் தகவல்களை கடத்திச் சென்றுள்ளனர்

ஏழிலைப் பாலை

வேள்பாரி புதினத்தில் முருகன் வள்ளியிடம் தன் காதலைச் சொல்ல எண்ணும் போது நேரடியாகத் தன் காதலைச் சொல்லாமல் ஏழிலைப் பாலை மரத்தின் அருகே அழைத்துச் செல்கிறான். அவளிடம் எதுவும் பேசாது அம்மரத்தினடியே சிறிது நேரம் இருக்கச் சொல்கிறான். வள்ளி தன் விரல்களால் அம்மரப்பட்டையை மெதுவாக வருடினாள். பின்னர் முருகன் புறப்படலாம் என்று அவளை அழைத்துச் சென்றுவிட்டான். மறுநாள் அதே இடத்திற்கு அவளை அழைத்து வந்தான். அம்மரம் முழுவதும் மலர்களால் நிரம்பியிருந்தது. நேற்று ஒரு மலர் கூட இல்லை இன்று மரம் முழுவதும் மலர்களால் நிரம்பி வழிகிறது என்றாள் முருகனிடம் அவன் பெண்ணின் அணுக்கத்தால் மலரும் மரம். நேற்று நீ இதைத் தொட்டதால் இன்று அனைத்தும் மலர்ந்துள்ளது ஏழிலைப் பாலை இம்மரத்தின் பெயர். மொத்த மலர்களும் தனக்குள் மலர்ந்தனவா என்று நினைக்கையில் அவளுக்கு முருகன் மீது காதல் வந்தது. காதலை வெளிப்படையாகச் சொல்லாமல் குறியீட்டின் வழி தனது தகவல்களை எண்ணங்களாகத் தெரிவித்துள்ளான் முருகன். இம்மரம் குறித்து கம்பராமாயணம் பால காண்டம் குறிப்பிடுகிறது

> ”பாத்த யானையின் பதங்களில் படு மதம் நாற,
> காத்த அங்குசம் நிமிர்ந்திட, கால் பிடித்து ஓடி,
> பூத்த ஏழிலைப் பாலையைப் பொடிப் பொடி ஆக,
> காத்திரங்களால், தலத்தொடும் தேய்ந்தது - ஓர் களிறு.”
>
> (கம்பராமாயணம் பா.எண்-6)

இவ் அடிகளில் இம்மலரின் மணமானது மதயானையின் மதநீரைப் போன்ற நாற்றத்தை ஒக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தெய்வ வாக்கு விலங்கு

குலசேகர பாண்டியனின் மகனான பொதிய வெற்பனுக்கும் கடல் வணிகத்தில் தலைசிறந்தவரான சூழ்கடல் முதுவனின் மகள் பொற்சுவைக்கும் திருமணம் நிகழ்த்த மதுரையே மணவிழா கொண்டிருந்தது அம்மண விழாவிற்கு வெங்கல் நாட்டு மன்னன் மையூரிகிழாரும் மற்ற சிறுகுடி மன்னர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். வியப்பை தரக்கூடிய வகையில் ஏதாவது ஒன்றை திருமண பரிசாகத் தந்து பாண்டிய மன்னனின் அன்பைப் பெறலாம் என்று எண்ணியிருந்த போது அங்கு மழை வெள்ளத்தில் அடித்து வரப்பட்டது இரண்டு தெய்வவாக்கு விலங்கு. இது என்ன விலங்கு என்று பலரும் யோசித்துக் கொண்டிருக்கும் சூழலில் பாணன் ஒருவன் அது பறம்பு நாட்டின் செல்வம் என்றும் பாரி இதனை தெய்வமாக கருதி வழிபடுகிறான் என்றும் கூறினான். இதனையே பரிசாக அளித்து விடலாம் என்று முடிவு செய்து தன் மகன் இள மருதனிடம் மையூர் கிழார் கொடுத்து அனுப்பினார்.

அச்சமயம் அந்துவன் சிறு குச்சி கொண்டு அதற்கு தொல்லை தந்தான். அது சுற்றி சுற்றி வடதிசை நோக்கி அமர்வதை கண்டார் திசைவேளாளர் கூண்டை விட்டு வெளியே அனுப்பிய போதும் அது வட தசை நோக்கி அமர்ந்ததை கண்டார் இதனை திசைகாட்டும் அதிசய விலங்கு என்று முடிவு செய்தனர். கடல் வாணிகத்திற்கு இதனைப் பயன்படுத்தலாம் என்று எண்ணம் மேலிட பறம்பு நாட்டிற்கு நுழைவதும் பாரியின் மீது போர் தொடுப்பதும் அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்றும் தற்போது சோழர்கள் போர் தொடுத்து தோல்வியையேத் எடுத்துரைத்தான் பரம்பு நாட்டு வீரர்களுக்கு நிகரானவர்கள் திரையர் குலமே அவர்கள் மிகவும் வலிமையானவர்கள் ஆனால் எண்ணிக்கையில் குறைவானவர்கள் இவர்களை முதலில் நாம் சிறைபிடிக்க வேண்டும் ஏனென்றால் பறம்பு நாட்டை பற்றி முழுமையாக அறிந்தவர்கள் அவர்களே அவர்களின் வீரம் கடல் வணிகத்திற்குப் பெரிதும் பயன்படும் என்றும் தெய்வவாக்கு விலங்கை அவர்களால் மட்டுமே கொண்டுவர முடியும் என்று எண்ணினர். எதிர்பார்க்காத நேரத்தில் திரையர்கள் மீது போர் தொடுத்து திரையரர்களை சிறை பிடித்து திரையர்களின் தலைவனான காலம்பனிடம் தெய்வவாக்கு விலங்கை கொண்டு வர வேண்டும் என்று மன்னன் கட்டளையிட்டான்.

தெய்வவாக்கு விலங்கை கவர்ந்து செல்லும் காலம்பனுக்கும் பாரிக்கும் மிகப்பெரிய சண்டையே நடந்தது. இருவரும் சண்டையிடும் போது தன்னுடன் போர் புரிவது பாரி என அறிந்ததும் மிகவும் மனம் வருந்தினான். பாரியும் காலம்பன் தனது ஆதிகுலத்தைச் சேர்ந்த திரையர்குலத் தலைவனோடு போர் செய்தேனா என வருந்தி அவனை தன் குலம் என கட்டித்தழுவி காலம்பனைப் பாரி நண்பனாக ஏற்றுக் கொண்டான். இறுதியில் காலம்பனையும் திரையர்குலத்தையும் காக்கும் நோக்கில் 40-க்கும் மேற்பட்ட தெய்வ வாக்கு விலங்குகளை கொடுத்து அனுப்பியும் திரையர் வீரர்களுடன் நீலன் உள்பட சில பறம்பு வீரர்களை அனுப்பி திரையர் குலத்தையும் தெய்வவாக்கு விலங்கையும் மீட்க பாரி துணையாக நின்றான். இவ்வாறு வடக்கு திசை நோக்கி அமரும் இவ்விலங்கு சரியான திசைகாட்டியாக அமைந்துள்ளது. விலங்கிற்காக மிகப்பெரும் போரே நடைபெற்றது என இப்புதினம் சுட்டுகிறது.

அசுணமா - பறவை

வேளாண்மையின் ஆதிநுட்பங்களைக் கண்டறிந்தவர்கள் கூடல் மக்கள். வைகைக் கரையில் நாகரிகத்துக்கு அடித்தளமிட்டவர்கள். ஆற்றங்கரையின் நிலவளம் கொண்டு பயிரிடவும் விளைவிக்கவும் அறுவடை செய்யவும் கண்டறிந்தவர்கள். மருத நிலத்தில் மண்ணையும் நீரையும் பிசைந்து உணவாக மாற்றக் கூடியவர்கள். தாவரங்களின் வேர்களை எந்த மண் தன்னுள் வாங்கிக் கொள்ளும் எனக் கண்டறிந்தவர்கள். பறவைகளின் கழிவில் இருந்து முளைவிடும் தானியங்கள் எவைஎவை என்பது குறித்து அறியும் அறிவுச் சேகரம் அவர்கள். பறவை உண்ட மிச்சமே நமக்கு என அறம் வகுத்து வாழ்ந்தவர்கள். கூடல் நகரை உருவாக்கிய குலத்தின் தலைவன் அகுதை. என்று புதினம் குறிப்பிட்டுள்ளது. புறநானூற்றுப் பாடலில்

> ”பாவடி யானை பரிசிலர்க்கு அருகாச்
> சீர்கெழு தோன்றான் அகுதைக் கண் தோன்றிய
> பொன்புனை திகிரியின் பொய்யாகியரே”
>
> (புற 254)

என்றும்

> ”மணம் நாறு மார்பின் மறப்போர் அகுதை
> குண்டுநீர் வரைப்பின் கூடல் அன்ன”
>
> (புற 347)

என்னும் பாடல் வரிகள் அவனது கூடல் நகரம் குறித்தும் அகுதை குறித்தும் கூறப்பட்டுள்ளன.

கொன்றை மரத்தில் செய்யக் கூடிய யாழையே கூடல்வாசிகள் மீட்டுவர். கொன்றை மரத்தில் மட்டுமே அடையும் பறவை அசுணமா. இசை கேட்டுத் தலையாட்டும் பறவை. அசுணமா என்பது அகுதையின் குலப் பறவை. வைகையில் புனலாட்டு விழா நடைபெற்ற போது கொற்கைப் பாண்டியனின் படை புனலாட்டுவிழா நடந்த இடத்தில் அகுதையையும் அவன் மக்களையும் வெட்டி வீழ்த்தியது. இறுதியில்அக்குலத்தில் எஞ்சியிருந்தவர்கள் அகுதையின் மனைவியும் அவன் மகன் நீலனும் மட்டுமே. என்று புதினம் சுட்டுகின்றது. குமட்டூர் முடவனார் ஒரு கவிதையில் அகுதையின் குலம் அழிந்த மறுநாள் யாழ் நரம்பில் மோதி மோதி அசுணமாக்களும் அழிந்தனவென்று கூறுகிறார். அகநானூற்றிலும்

> ”கடாம் இருஞ்சிறைத் தொழுதி ஆர்ப்ப யாழ்செத்து
> இருங்கடல் விடரனை அசுணம் ஒர்க்கும்”
>
> (அக 88)

என்ற பாடல் வரிகள் சுட்டுகிறது. அசுணமா பறவை குறித்த செய்தி சுட்டப்பட்டுள்ளது. இதன்வழி பறவைகளே வேளாண்மைக்கு முதன்மை என்றும் அசுணமா பறவை தன்னை வளர்த்தவர்கள் இல்லையெனில் தானும் வாழாது என்பதை அறிய முடிகிறது.

நாகங்கள்

தேறிமலையின் அடிவாரத்தில் உள்ள குலத்தின் தலைவன் வயது முதிர்ந்து உடலில் சுருக்கம் ஏற்பட்டது. தோலில் சுருக்கம் ஏற்படத் தொடங்கியதை நீக்க என்ன செய்ய வேண்டும் என்று பல திசைகளுக்கு ஆள் அனுப்பினான். வடதிசையிலிருந்து வந்த முனி ஒருவர் சிறு குண்டம் அமைத்து பலவகையான மரக்குச்சிகளைப் போட்டு தீ மூட்டி புகை வரும்போது அதன் நடுவே நின்று நாகங்கள் சட்டையைக் கழட்டும் போது ஒரு மூலிகையை உண்ணும் அவற்றை நீ உண்டால் சுருங்கிய மேல் தோள் கழன்று

யௌவனம் அடைவாய் என்றார். அந்த ரகசியத்தை அறிந்தவர்கள் நாகக்குடியினர் அவர்களிடம் கேட்டு அம்மூலிகையைப் பெற்று பயனடைவாய் என்றார். பின்னர் எருக்கு மலைக்கு 12 வீரர்களும் பிடார (பாம்பைப் பற்றி அறிந்தவர்) வைத்தியன் இருவருமாக 15 பேர் எருக்கு மலையேறினர். நாகர்களைத் தவிர வேற்று மனிதர்களின் வாடை அறியாத மலை எருக்கு மலை. இம்மலையில் எண்ணற்ற நாகங்களின் வகைகள், அதன் தன்மை ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

நாகங்களின் வகைகள்

எருக்கு மலை இவர்கள் ஏறியதும் நிழல் விரியன் நாகம் வீரன் ஒருவனின் நிழலுக்குள் நுழைந்தது. நிழல் விரியன் என்பது ஒரு மனிதனின் நிழலுக்குள் புகுந்து விடும். அவன் நின்றால் கால் குதிகாலைக் கடித்துவிடும். அதனிடமிருந்து தப்பிக்க மாலைப் பொழுது வரும் வரை நடந்து கொண்டேயிருக்க வேண்டும். சூரியன் மறைந்து மனித நிழல் சிதைந்தால் தான் அது திக்குத் தெரியாமல் திசை மாறும் என்கிறார் ஆசிரியர்.

இளையபிடாரன் தொலைவில் இருந்த புதரின் மேல் பெரிய கிளை போன்ற ஒன்று கழுத்தை நீட்டிக் கொண்டு பறப்பவற்றை உணவாக்கிக் கொண்டிருந்ததைக் கவனித்து அதன் மீது கல் விட்டெறிந்தான் பின் தான் தெரிந்தது அது கட்டை விரியன் என்று ஒரு கட்டை விரியன் இருந்தால் அதைச் சுற்றி குறு விரியன் இருக்குமாம் அக் குறு விரியன் நான்கு பேரைக் கொன்றது. இவ்வாறு மூன்றில் ஒரு பங்கு வீரர்களை இரண்டாம் நாளிலே இழந்தனர். “இவ்விரியன்களின் நஞ்சு இரத்தத்தில் பரவும் போது உடல் திசுக்களை அழிக்கிறது. தீண்டப்பட்ட பகுதியில் வீக்கம், தசை, அழுகல், வலி, சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டு மரணத்தை ஏற்படுத்தும்.

மலஞ்சாரை என்பது மிகவும் வயதான பாம்பு மனிதன் நூறு வயதை எட்டுவதைப் போன்று பாம்பு பெரும் வயதை அடைந்தால் அதன் உடல் பாதியளவுக்குச் சுருங்கி விடும். அதனால் நெளிந்து போக முடியாது உடலை முறுக்கி வலது இடது புறமாகத் தான் புரளத் தோன்றும். பாம்பு புரளும் இடத்தில் வேறு பாம்புகள் இருக்காது என்றும் ஆசிரியர் புதினத்தில் பதிவிடுகிறார்.

பாம்புகள் முன்நகரும் என்று மட்டுமே அறிந்த மூத்த பிடாரனின் அறிவைப் பொய்யாக்கின செம்மண்ணுளி. இது கோடை காலத்தில் முன்நகரும், மழைக்காலத்தில் பின் நகரும். இது நிலத்தின் வெப்பத்திற்கேற்ப நகரும் இரு வகைச் செதில்களைக் கொண்டது. என்று அறிந்து கொண்டான். “ஆனால் மண்ணுளிப் பாம்பிற்கு நஞ்சு இல்லாததால் மனிதர்களோ பிற உயிரினங்களோ உயிரிழக்க வாய்ப்பில்லை என்கின்றனர் ஆய்வாளர்கள்.”

குருதிப் பனையன் என்னும் நாகம் எள்ளுச் செடியில் உற்பத்தியாகும் கண்ணுக்குத் தெரியாத கொடும் நாகம் என்கின்றனர். பச்சிலை விரியன் மனிதனைக் கண்டால் தாவிக் கடிக்கும் உச்ச நஞ்சைக் கொண்டது பச்சிலை விரியன் என்றனர்.

எரிவிரியன், ஊதுசுருட்டை, நண்டுதின்னி, வெண்சாரை, எனப் பலவகையான பாம்புகள் குறித்து ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஆறு குன்றுகளைத் தாண்டி மூன்று பேர் மட்டுமே மலையடிவாரத்திற்கு வந்து சேர்ந்தனர்.

மேலும் நாகங்கள் தீண்டினால் அதற்குரிய வைத்திய முறை விசவைத்திய சிந்தாமணி என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூத்த பிடாரன் நாகர் குலத் தலைவனிடம் பாம்பு சட்டையை உறிக்கும் போது ஒரு மூலிகையை உண்ணுமாம் அதனைத் தாங்கள் தந்துதவுமாறு கேட்டுக் கொண்டான். நாகர்கள் தரவில்லை. பின்னர் நாகர்கள் மீது போர் தொடுத்து தோற்றனர். அன்றிரவு குன்றுகளுக்குத் தீ வைக்கப்பட்டது. பாம்புகளும் நாகர் குல மனிதர்களும் மடிந்தனர்.

தீக்களிக்குள் விழுந்த நாகங்கள் மட்டும் பிழைத்திருந்தன. எஞ்சிய நாகர்கள் பறம்பு மலையில் அடைக்கலம் புகுந்தனர். இவ்வாறு நாகங்கள் குறித்த பல தகவல்கள் இப்புதினத்தில் சுட்டப்பட்டுள்ளன.

பறம்பு மக்கள்

மலைமக்களில் ஒரு பிரிவினர் கால்நடைகளை வளர்த்தனர். குறிஞ்சி நிலத்தை விட்டு இறங்கிய 5 குடும்பங்கள் செம்மலையின் அடிவாரத்தில் குடில் அமைத்து கால்நடைகளைப் பெருக்கினர். 5 வகை குடும்பமும் குலவழி செழித்தது. குலத்துக்கு அடையாளம் தேவைப்பட்டது. ஆண்கள் தம் வலது தோளில் சூட்டுக் காயங்களை உருவாக்கினர். பெண்கள் குலத்துக்கு ஒரு வகையென ஐந்து வகைப் பிரிவாக சடைகளைப் பின்னினர். இவர்களை அழகைப் பேணும் அதிசயக் கூட்டம் என்றனர். புதிய நாகரிகத்தின் அடையாளமாக செம்மலை மாறியது. மாடுகளுக்கு செம்மலையில் கிடக்கும் கற்களை எடுத்து கொம்புகளுக்கு இடையில் கயிறு முடிந்து நெற்றிப் பட்டத்தை உருவாக்கினர்.

அக்குலத்தில் செம்பாதேவி என்ற அழகிய பெண்ணை உறையுர் மன்னனின் மகன் கிள்ளி விரும்பினான். ஆனால் மன்னனுக்கோ மாட்டின் நெற்றியில் கட்டிருந்த கல் மீது அளவு கடந்த பற்றாயிருந்தது. செம்மலை முழுதும் அக்கல் இருந்த செய்தி அறிந்து அக்குடும்பங்கள் மீது போர் தொடுத்தான். அப்போரில் மக்கள் பலர் அழிந்தனர்.

இதன்வழி குலத்திற்கென்று ஒரு அடையாளத்தை மக்கள் தேர்ந்தெடுத்தனர் என்றும் இயற்கை வளங்கள் மீது ஆசைப்பட்ட மன்னர்கள் அழிந்தனர் என்ற தகவல்களும் நமக்குக் கிடைக்கின்றன.

தொகுப்புரை

வேள்பாரி புதினத்தில் தகவல் தொடர்பு இயற்கை வழித்தொடர்பாகவே அமைந்துள்ளது. பாரியின் கொடைச் சிறப்பு, பாணர்கள் வழியாக அவன் புகழ் பரவுதல், இயற்கையோடு இணைந்த வாழ்வியல், விலங்குகள், பறவைகள், ஊர்வன முதலியவற்றின் வழி தகவல்களை அறிந்து அதன் வழி செயல்பட முடிகிறது. தெய்வ வாக்கு விலங்கால் வடக்குப் பக்கம் பார்த்து மட்டும் அமர முடியும், பறவைகள் வேளாண்மையின் உயிர் நாடி, நாகங்களின் தன்மை, குலத்திற்கான அடையாளங்கள் இவற்றை வேள்பாரி புதினம் வழி தகவல் கூறுகளாகப் பெற முடிகிறது. மனிதர்கள் மட்டும் தகவல்களைச் சேகரித்துத் தருபவர்கள் அல்ல ஓரறிவு உயிர் முதற்கொண்டு தகவல்களை நம்மிடம் கடத்திச் செல்வதாக வேள்பாரி புதினம் நம்மிடையே எடுத்தியம்புகிறது. இயற்கையை காப்பது நம் பெரும் கடமை என்பதையும் இப்புதினம் அறிவுறுத்துகிறது.

துணைநூற்பட்டியல்

1. கம்பராமாயணம், ச.வே.சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், 2018, சென்னை
2. புறநானூறு மூலமும் உரையும் புலியூர் கேசிகன் (உ.ஆ) முதற்பதிப்பு 2010, சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை-14.

3. அகநானூறு மூலமும் உரையும் ந.மு.வேங்கடசாமி நாட்டார் (தொ.ஆ) சாரதா பதிப்பகம், மூன்றாம் பதிப்பு 2019, ராயப்பேட்டை, சென்னை-14.
4. Tamil oneindia.com
5. ta.m.wikipedia.org
6. சிறுமணவூர், முனிசாமி முதலியார், விஷவைத்திய சிந்தாமணி, கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு